# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 108/2014** **Date:17.04.2026.**

**(DW1)- முருகன்**

**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை

1. 1 ஆம் பிரதிவாதியும் நானும் சேர்ந்து ஒரே எதிருரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ஆம் பிரதிவாதி ஓய்வு பெற்ற வட்டாட்சியர் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கும் எனக்கும் நல்ல உறவுமுறை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் நான் விசாரிக்க முடியாது. 1 ஆம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் அசல் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் என்னிடம் தான் உள்ளது. அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் கேட்டு இருந்தால் கொடுத்திருப்பேன்.

2. தாவா சொத்திற்கான மூல ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்யலாம். நான் தாவா சொத்திற்கான உரிமை ஆவணங்களை தாக்கல் செய்யாமல் பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருவதை காட்டகூடிய எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சொத்தை அனுபவம் செய்யகூடாது என்று தடை உத்தரவு வாங்கியுள்ளார்கள் எனவே ஆவணம் இல்லை.

3. நான் இரணியல் சார்பு நீதிமன்றத்தில் வாதிகள் பெயரில் உள்ள ஆவணங்களை ரத்து செய்ய கேட்டு அ.வ.எண். 27/2019 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 20.11.2021 ல் அன்று தள்ளுபடி ஆனது என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் தற்போது மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கு 3 முறை நான் முறையாக வழக்கை நடத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான், எனது மகனுக்கு உடல் நல குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கபட்டு நான் உடன் இருக்க வேண்டிய சூழ்நிலை ஆகிவிட்டது எனவே வழக்கை மேல் நடத்த முடியாமல் தள்ளுபடி ஆனது.

4. மேற்படி தள்ளுபடி ஆனதை காட்டக்கூடிய ஆவணங்களை வாதி வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.21 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் அது

பற்றி தெரியாது. நான் எந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.16 முதல் வா.சா.ஆ.21 உத்தரவுகள் இறுதி நிலையை அடைந்துவிட்டது என்றாலும் நான் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் வா.சா.ஆ.16 முதல் வா.சா..ஆ.21 ஆவணங்கள் உத்தரவிற்கு மாறாக இந்நீதிமன்றத்தில் எந்த கட்சியும் சட்டபூர்வமாக செய்ய முடியாது என்றால் சரியல்ல.

5. எனவே தான் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி ஆவணங்களுக்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நாகர்கோவிலில் உள்ள இடலாகுடியில் பெட்டிகடை வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. இடலாகுடியில் என்ன கடை வைத்திருந்தேன் என்றால் எந்த கடையும் நான் நடத்தவில்லை. எனது தம்பி இடலாகுடியில் பெட்டிக்கடை வைத்திருந்தார் என்றால் சரியல்ல. இடலாகுடியில் நானும் எனது தம்பியும் பெட்டிகடை வைத்திருந்தோம் என்றாலும் அதில் ரேசன் அரிசி முதலிய பொருட்களை கடத்தி வியாபாரம் செய்தோம் என்றால் சரியல்ல. நான் முதலில் புத்தன்குடியில் குடியிருந்தேன் என்றால் சரிதான்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**